# அகில இந்திய
# சித்த வைத்திய சங்கம்,
## சென்னை.

முதலாவது வெளியீடு.

3854

## சித்த வைத்தியத்தின் தொன்மையும்,
## வட நூல் ஆயுர்வேதத்தின்
## தற்காலீகமும்

BY

**டாக்டர் கே. வேலன்.**

---

**1933.**

*All Rights Reserved.*] [விலை அணா **0—2—0.**

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

3854

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISWANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

3854

# நிலப்பரப்பிணுக்கம்.
# தென்னாட்டின் தொன்மை.

குமரிக்குமரன் மலரடிகள் மனத்துன்னி :

இத்தமிழ்நாட்டில் வீட்டினுள்ளும் புறம்புமாக உலாவும் மருத்துவமும், வடநாட்டார்களால், வடமொழியில் வகுக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தற்போதுலவும் மருத்துவத்தையும் குறித்துப் பேசப்புகின், இரண்டும் பல நூற்றாண்டுகளாக நம் நாட்டுள்ளிருத்தலால் கட்டமாகத்தானிருக்கிறது. புடவிதத்துவ நூல் வல்லாராலாராயப்பட்ட வகையில், திருப்பதிக்கும் குமரிக்குமிடையேயிருக்கும் நிலப்பரப்பு மற்ற நிலங்களைவிட 350 மைல் கனமுடையதாக விருத்தலினுல், அந்நிலம் சுமார் 100 கோடி ஆண்டுகளுக்கு முன்னேயே ஆக்கப்பட்டதேனக் கூறுவர். இங்கே உலக சிருட்டியை சுருக்கி கூறல் அவசியமென நினைக்கிறேன். ஆராய்ந்துழி, நட்சத்திர மண்டலங்களைக் கடந்து தூர திருட்டிக்கண்ணுடி வழியே காண்பவை, ஓர் வகை புகை போன்றதும், பல வகை நிறங்களையுடையதும், ஒடுங்கி விரிதல் தன்மையுடையதும், சதா வேகமாக சுழன்றுக் கொண்டிருப்பதுமாய ஓர் மண்டலம். நம் உலகம் போன்ற பல கோடி அண்டங்களை சூழந்கிரா

நின்றது. வெகு கால அசைவினால் காற்றுப் பகுதியும், தீப்பகுதியும், நீர்ப்பகுதியும் ஒன்று சேர்ந்து அணுக்களாகி தோன்றுகின்றன. பல காலம் மீண்டும் மீண்டும் அசைந்துக் கொண்டும் சுழன்றுக்கொண்டு மிருப்பதால் குழம்பாகின்றன. சுழன்றுக்கொண்டிருந்த ஆவி வர வரக் குளிர்ந்து நீராகி, மீண்டும் அண்ட வடிவாகின்றன. ஆவி யாயிருந்தவை இந்நிலைக்கு வர, 60,000 கோடி ஆண்டுகள் செல்லும். பிறகு எரியும் அண்டங் கள், நட்சத்திர மண்டலங்கள் (சூரியர்கள்) ஆக, பத்து நூராயிரங் கோடி ஆண்டுகள் செல்லும். இவ்வகை சூரியன்களிலிருந்து தான் நமதண்ட மாகிய இப்பூவுலகம் வெளிப்போந்தது. சூரியன் என்றால் வடமொழியல்ல. சுரீல் எனக்காய்கிறது என்பதைக் கவனிப்பீரேல், 'சுர்' என்றவோர் வேரினிடத்தே தோன்றிய வார்த்தை சூரிய னென்பதாகும். சூரியனெனில் காய்பவன் என்ப தாம். இனி இப்பூமண்டலம், குளிர ஆரம்பிக்க எட்டு கோடி வருஷம் சென்றது. இரண்டு லட் சம் டிக்கிரி உஷ்ணத்திற்கிறங்க, 35 கோடி வரு ஷங்களாயிற்று. மீண்டும் 35 கோடி ஆண்டு கட்கு பின்னர்தான் 200 டிக்கிரிக்கு இறங்கிற்று. அதன் பிறகு, குழம்பாயிருந்த பூமண்டலம் உறைந்தகாலம், 9 கோடியே எண்பது லட்ச வரு ஷங்களாம். அவ்வாறு உறைந்தவகையில் நாம் வசிக்கும் இப்பகுதி 100 கோடி வருஷங்களுக்கு முன்னுண்டாகியதேனில், இதன் தோன்மையை நாம் எடுத்துக்கூறவும் வேண்டுமோ? ஆனால் இப்போது எடுத்திருப்பதற்கு, வடக்கே நில மெழுந்து வெளிவராத காலத்திலேயே தெற்கே

 3854

நில மிருந்தது எனக்குறிக்க கீழ்க்கண்டவை சான்ருகும் :

## வடக்கே பெருங்கடல் இருந்தமை.

சிந்து கங்கை சமப்பெரு வெளியாகிய பாலை வனம் சுமார் 1,200 மைல்கள் நீளமுடையது, சமுத்திர மிருந்ததைக் காட்டுகின்றது. தெந் நாட்டிலிருக்கும் திருப்பதி மலைகளுட்பட்ட மலைகளெல்லாம் விந்தயத்தைப் போலவும், இமயத்தைப் போலவும் நீரிலமிழ்ந்திருந்த குறிகளைக் காட்டுகிறதில்லை. இமயத்திலும் விந்தயத்திலும், கடலலையினுல் மோதப்பட்டு கூராகிய பாறைகளும், கிளிஞ்சில்கள் முதலிய நீரில் வாழும் பிராணிகளும் பாறைகளில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. ஆகையினுல் இமயப்பகுதியும் விந்தயப் பகுதியும் கடலுள்ளிருந்ததென வருதலால் வடக்கே பெரும்பரப்பாகிய கடலிருந்தது. கோபிவனுந்திரம், அராபியாபாலை நிலம், சஹாராபாலைநிலம், சைபீரியா பாலை நிலம் இவைகளெல்லாம் முன்னே பெருங்கடல் பரவி யிருந்ததைக் காட்டுகிறது. இமயமும் விந்தயமும், ஆல்டாய் எனும் மேருவும் ஒரே காலத்திலல்லாமல் பல காலங்களில், பலவாருக வெளி கிளம்பியும், உள்ளே முழுகியும், பூமியையே ஆணிவேர் வரைக்கும் அசைத்தும் பல பேராபத்துக்களை விளைத்துக்கொண்டிருந்தன. அப்படி யிருத்தலின், எக்காரணங்களைக்கொண்டும் நாடு இருந்திருக்க முடியாது. புராணுதிகளில், விந்தயமும், இமயமும் அடிக்கடி மேலே கிளம்பியும், உள்ளழுந்தியும்,

அடிக்கடி சண்டை யிட்டுக்கொண்டிருந்தன வெனக் காண்கிறோம். அகத்தியனு ரென்பார், அதை அமைதியுறச் செய்தன ரென்பதை ஆராயின், நெருப்பு மலைகளின் அட்டகாசம் தலைவிரித் தாடிய கால மொன்றுள தென்பது விளக்கம். இப்படி மலைகளொன்றுக் கொன்று குதிக்கவாரம் பித்தால் ஒவ்வொரு மலையும், 1000, 500 மைல்கள் நீளமும், 1000, 100 மைல்கள் அகலமும், 5, 3 மைல் உயரமுடையவைகளாகையினுல், அவைகளினுட்டம் திருப்பதி மலை வரைக்கும் அசைத்திருக்கக் கூடும். அப்போது திருப்பதி மலை உயரமாயும் வடக்கே அகண்டு மிருந்திருக்க வேண்டும். இம்மலையும் ஓர் காலத்தில் உள் ளழுந்தி வெளிப் போந்திருக்கிறது. இரண்யன் ஆண்டகாலத்தில் இரணியாட்சதனுல் புவி திருடிக்கொண்டு போகப்பட்டு, கடலுள் ஒளித்து வைத்திருந்ததை வராக மூர்த்தி வெளி தோற்றுவித்தனரென்று கூறுவர். திருப்பதி மலையையே வராககிரி யென்றும், வராக அவதார மென்றும் வைணவ நூல்கள் கூறுவதாலும் ஸ்ரீசைல மலைகளிடையே இரண்யன் ஆண்ட அகொபிலமென்பதிப்போதிருப்பதும் இதை உண்மை யென்றெடுத்துக் காட்டும்.

## இமய விந்தயப் பகுதியில் கடலிருந்தமை.

இது முழுமையும் நாடில்லாத காலம். வடக்கு வேங்கடமென்று கூறியதும் இனி விந்தயத்திற்கும் இமயத்திற்குமிடையேயும் கிழக்கு வங்கா

ளம், பஞ்சாப், அசாமிலும் கடலிருந்ததாகக் கூறும் பின்வரும் சான்றுகள். (1) இராமாயணத்தில் சோன் என்னும் நதியைக் கடந்தவுடன், இட்சு சமுத்திரமும், அதைக் கடத்தலின் சிவந்த நீரையுடைய லோஹித் கடலும், கடலைக் கடக்காமலே, பாற் கடலும், அதற்கடுத்தாப் போலே சுத்தோதகக் கடலும் இருந்ததை அறியலாம். மேற்கு பாகம் கருப்பஞ்சாறென்றும், வடக்கே யிருந்தது லோஹித்யாயென்னும் பிரமபுத்திரா நதி வந்து கலக்கும் லோஹித் என்னும் சிவந்தக் கடலென்றும், கீழ்பக்கத்தில் இமயமலை அடிவரை எட்டியிருந்தது திருப்பாற் கடலென்பதாகவும் விளங்குகின்றது. சுக்ரீவன் அயோத்தியிலிருந்து கிட்கிந்தைக்கு திரும்பிச் சென்ற வழியாக வால்மீகி கூறுகின்றார். தொல்காப்பியரும் வடக்கே வேங்கடத்தையே தமிழ்நாட்டெல்லையாகக் கூறியுள்ளதைக் கூர்ந்து கவனித்தால் வடக்கே கடலிருந்ததெனக் கொள்வதிலிழுக்கில்லை.

2. விசுவாமித்திரரெனும் பெரியார், ருக்கு வேதம் 3 காண்டம், 33 வாக்யம் 1ம் பகுதியில் தற்காலம் சிந்துநதியில் கலக்கும், பியாஸ், ஸட்லேஜ் எனும் நதிகளை சமுத்திரத்தில் நேராகவே கலப்பதாய்க் கூறுவதால், வடக்கு 31-15 பாகையில் இப்போது அவைகள் சிந்து நதியில் கலப்பதால், அப்போது அங்கே சமுத்திர மிருந்திருக்க வேண்டும். லாகூர் என்னும் பட்டின மிருக்குமிடத்தில் கடலிருந்திருக்கின்றது. இமயம் வரை எட்டியிருந்த கடலொதுங்கி வந்துக் கொண்டிருந்த காலம்.

3. உலக சிருட்டி, திதி, சம்மாரம் என்று நூலெழுதிய பிரோதி பிரசாரிராய் எனும் வங்காள ஆசிரியர், கீழ் வங்காளநாடு கடலடியி லிருந்த தென்பதை வெகு ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டுகிறார்.

4. கடல்கடைந்த மந்தரமலை, பாகல்பூருக்கு 13 மைல் தூரத்திலிருக்கிறது. இம்மந்தர மலை திருப்பாற் கடல் கடைந்த காலத்தில் மத்தாக உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இப்போ தும் அம்மலை மத்தைப் போலவே அடிபெருத்து நுனி சிறுத்து மேலிருந்து கீழ்வரைக்கும் வட்டா காரமாய் இருக்கிறது. கடல் கடைதலென்பது அப்பகுதி நெருப்புக் குழம்பாயிருந்து, கொதித் துக் கொண்டிருந்தகாலம். குழம்பில் பதார்த்தங் கள் கொதிப்பினால் குதித்தெழுகிறதைப் போல, மலைகள் இக்குழம்பில் எகிறி எகிறி மாறி மாறி குதித்த காலம். மலைகளோர் காலத்தில் பறந்து கொண்டிருந்தது இக்காலமே. அப்போது இம யம் மேலே கிளம்பாத காலம். மேருகிரியாகிய ஆல்டாய் மலைக்கும் விந்தயமாகிய மலைக்குமிடை யில் இக்கோளாரு நிகழ்ந்தது. பிறகு தன்வந் தரியாகிய இமயமலை ஔஷதிகளுடனுதித்தது. இப்போதுதான் வடபகுதியில், நெருப்பு மலைகளி னட்டகாசப் புகையினால் மறைந்திருந்த, சந்தி ரன் தோன்றியகாலம். நெருப்பு மலைகளின் கந்தகமாதியாகிய புகையே ஆலகால விஷ மாம்—அப்போது பெய்த நீலமேகமாகிய மழையே சிவபெருமானும்—மற்றும் இவ்வாறே யாம்.

# லக்ஷம் வருஷங்களுக்கு முன் தமிழர் ஞானம்.

வடக்கே கடலிருந்து தெற்கே நிலமிருந்த தெனக் கூறினோம். இனி தென்னாடு நமதாராய்ச் சிக்குட்பட்டவரை எவ்வளவு காலமாயிருக்கிற தென வாராய்வோம். சூரபதுமன் ஆண்ட காலத் திலும், இராவணன் ஆண்ட காலத்திலும், சூரியன் ஒரு புறமே காய்குவன். அதிகக் கடுமையாகக் காயான் நெருப்பு சுடாது என்பதை ஆராயின், இவ்வாராய நிகழ்ச்சி இப்போது ஆஸ்திரேலியா கண்டத்தின் தென்பகுதியில் நடைபெறுகின்றது. அதாவது தெற்கு 23 பாகை, 28 கலைகளுக்கு அப்பால் தான் சூரியனுடைய ஒரு புறத் தோற்ற மும், நெருப்பின் வெப்பமின்மையும் ஏற்படும். இது நிற்க பெரும்பாலார், இராமாயணமென் பது காந்த புராணக் கதையை ஓர் வகையில் மாற்றி எழுதியதே என்பர். அதற்குச் சான்றாக, இரு புராணங்களிலும் (1) மூவரே எதிரிகள் (2) உடன்பிறந்தார் (3) தங்கையொருத்தி, உண்டு. (4) இராமனால் அல்லது முருகனால் எதிர்க்கப்படு வது. (5) தங்கையை லட்சுமணன் பங்கம் செய் வது. தங்கையை ஐயனார் பங்கம் செய்வது. (6) சீதையை எடுத்தல், இந்திராணியை எடுக்க முயலல். (7) போர் நடப்பது தென்கோடியில். (8) பச்சை நிறமுடைய குரங்கு வாகனம், சிவந்த, வெண் பருந்து கொடி, பச்சை நிறமுடைய மயில் வாகனம், சிவந்த சேவல்கொடி. (9) அனுமான் தூதுசென்று இலங்கையை யழிப்பது, வீரவாகு தேவர் தூது செல்லல். இன்னும் பலவகை

நம்ப முடிந்த வகைகளை எடுத்துக் காட்டுவர். ஆக இவை பழமையாகிய காலத்தைக் குறிக்கும். தவிர வான சாத்திர வகையில் மூலமென்னும் நட்சத்திரம் அசுரநாளெனும் பேர் பூண்டு, தெற்கே மட்டிலும் தோன்றி, வடக்கே தோன்றாத தொன்றுகையாலும், அந்நட்சத்திரத்தை தமிழர்கள் ஆணி அல்லது ஆனி என்று கூறுவதாலும், அப்படி ஆணி என்பது (நடு அல்லது) உச்சியெனக் கொள்ளுவதால், அவ்வாறாய மூல நட்சத்திரத்தை தமக்கு தோன்றாத தோன்றாயிருந்தாலும், ஆணி என்றருத்தம் கொடுக்கும்படியான மூலமென்றசொல்லால் வடநூலார் ஒப்புக் கொண்டதாலும், அவ்வாறாய நட்சத்திரம் மீது தமிழ் நாட்டில, சூரிய மத்திய ரேகை Vernal Eqinox (வசந்த அயனத்தில்) பரவி தோன்றிய காலம் சுமார் 85,000 ஆண்டுகளுக்கு முன்னுகையாலும் இதை தமிழர் நாடு என்றதாலும், தமிழ் நாட்டில் வானசாத்திரப் பழக்கம் சுமார் இலட்ச வருடங்களுக்கு முன்னுலேயே இருந்திருக்கவேண்டும்.

சூரிய வசந்த அயனம் ஒவ்வொரு நட்சத்திரங்களின்பேரிலும், நிலவும் காலம் 4,232 வருஷங்கள் 6 மாதங்கள் ஒரு நாளாம்—தற்காலம் இந்த அயனமானது உத்திரட்டாதி நட்சத்திரத்திலிருப்பதால், இதைக் கொண்டு கணக்கிடலின், சுமார் 85,000 வருடங்கட்கு முன்னேயே தமிழ் நாட்டில் (தென் பகுதியில்) மாத்திரம் தோன்றும் ஆனி எனும் மூல நட்சத்திரத்தின் பேரில் ஷெ வசந்த அயனம் நிறுவிய காலமாதலின், அதனை தமிழர் உணர்ந்திருந்ததினுல், நெடுங்காலம் முன்னயே

தமிழ்நாடிருந்தது பெறப்பட்டது. ஆதலின் தமிழர்களைக் கொண்ட தமிழ்நாடு அதற்கு முன்னாலேயே யிருந்திருக்குமென்பது சொல்லாமலே அமையுமன்றோ. இனி இத் தமிழ் நாட்டில் தமிழ் ஒலியும் மணமும் பறந்து வளர்ந்ததை மறுக்கவல்லார் யார்? அப்படியாயின் தமிழுலகத்தில் வாழ்ந்திருக்கும் தமிழர்களுக்கு தக்க வைத்தியம் பெரியோர்களாகிய அறிவர் என்னும் சித்தர்களால் அறிவிக்கப்பட்டிருந்து பழக்கத்திலிருந்து இன்றும் நமது பாட்டிகளாலும் மற்றவர்களாலும் கைவிடப்படாமலிருப்பதுதான் சித்த வைத்தியமென்பதாக இப்போது கூறுவது — இவ்வகை தொன்றுதொட்டு வரும் சித்த வைத்தியம் பழமையானது. பழமை என்று கூறும் காரணம் யாதெனில், பழமையெனில், பல நூறாயிரவாண்டுகளாக ஏற்பட்ட அனுபவமே அறிவின் முதிர்ச்சியாகையால், அது வெகுவாக பயன்படுவது எனக்கொள்க.

## வட நூலாரின் ஆயுர்வேதம்.

சரி, இனி, வட நுலாரால் கையாளப்படும் ஆயுர்வேதத்தை ஆராய்வோம்—இதற்குமுன் வடநூலை கையாள்பவர் யார் என்பதைநோக்குவோம். வடக்கே நாடில்லாமல் கடலிருந்த காலத்தில், தென் கிழக்கிலும் வட கிழக்கிலுந் தெற்கிலுஞ் சில கடற் கோள்கள் ஏற்பட்டன. புடவி தத்துவ நூல் வல்லார் ஆராய்ச்சியின்படி 10 லட்ச வருஷத்திற்கு முன்னும், ஆறுலட்ச வருஷத்திற்கு முன்னும், இரண்டு லட்ச வருஷத்திற்கு முன்னும், 85,000 வருடங்கட்கு முன்

னும், பன்னீராயிரம் ஆண்டுகட்கு முன்னும் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னும் நாம் வாழு மிவ்வுலகில் பெருங்கடல் கோள்கள் நிகழ்ந்திருக் கின்றன. முன்னே 85,000 ஆண்டுகட்கு முன் னேயே தென்பகுதியில் தமிழர்களிருந்தார்க ளெனக் கூறினமையால், அதற்குப் பிறகுதான் தென்னாட்டில் கடற்கோள் நிகழ்ந்திருக்கும். முச்சங்க காலத்தை நோக்கும்போது சுமார் 10,000 வருட காலங்களாகிறது. முதற் சங்க மாகக் கருதப்படுவதில், பாடப்பட்டதாகக் கூறும் "செங்கோன் தரைச் செலவு எனும் நூலில், பெரு ஆழியக்கரக்கோ நாமஞ்சுவாம்" என் பதை நோக்கிடின் அதற்கு முன்னேற்பட்ட கடற்கோள் மகா பயங்கரமானதேன்பது விளங்கு கின்றது. பத்துக்கும் பன்னீராயிரவாண்டு கட் கும் இடையில் அது நிகழ்ந்ததாயிருக்கும். காலஞ் சென்ற பிரபல வானசாஸ்திரியாகிய லாப்லேஸ் என்பவர் உலகில் பெருங்கோளாறுகளாகிய, கடற்கோள், பூமி அதிர்ச்சி, அண்டங்க ளோன் றோடோன் றிடிபடுதல் முதலியன நடக்குங் காலத்தில் பேரதிர்ச்சியினுல் ஏற்படும் அச்சம் மனிதர்களின் மூளைகளை உருகும்படி செய்வ துடன், முன்நடந்ததை யெல்லாம் மறந்துவிட்டு, முன்னம் ஒன்றுமே யறியாத மாந்தர்களைப்போல் நடந்துக்கொள்ளச் செய்யும் என்று கூறுவர்.

அக்கடற் கோளால் பிரிக்கப்பட்ட ஆபிரிக்கா பகுதியிலிருந்த தமிழர் அப்பேரதிர்ச்சியினுல் எல் லாம் மறந்தோராகி, காலம் செல்லச் செல்லச் சஹாரா கடல் வற்றிவிட வடக்கே போந்து-மீண் டும் மத்தியதரைக் கடலுள்புக திரும்ப வழி

யின்றி உத்தர துருவம் சென்று பலவாண்டுகளுக்குப் பின்னால் எதிரே நாடு தோன்றி வளமெய்த, துருவத்தில் குளிர்ச்சி தாங்காமையினால், இந்திய நாடுப் போந்து உருமாறி வெண்மையாய் விட்டதால் வேற்றோர்களெனக் கருதப்பட்ட ஆரியரெனும் வடநூலாரே யாவர். இப்போது வட துருவத்தில் உஷ்ண நாடுகளின் குறியேற்பட்டிருக்கிறதாக ஆராய்ச்சியாளர் கண்டிருக்கிறது, இக் கூற்றை வற்புறுத்தும். அதாவது மனிதர் வட துருவம் சென்ற காலத்தில் உஷ்ணமாயிருந்தது, காலக்கிரமத்தில் குளிர்ச்சி யடைந்ததென்பதே; இப்போது மீண்டும் அந்நிலை திரும்பிவருதலே சான்றாம்.

இவ்வகையோர் மீண்டும் தமிழரோடு பழகலின் பெற்ற வைத்தியமே ஆயுர்வேத வைத்தியமாம்.

## ஆரியரின் தந்திரம்.

ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தம்து "தமிழ் மொழியின் வரலாறு" என்னும் நூலில் "ஆரியர்கள், தமிழரிடத்திலிருந்த பல அரியவிஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னமே அவற்றை தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினார்" என்று வற்புறுத்திக் கூறுவர்.

## நாடி பரீட்சை முதலியவை.

சித்த வைத்தியத்தில் மூன்று நாடிகளாராய்ச்சி முக்கியமானவை. வியாதிகள் தோன்

றியபின் காண்பதைவிட, நோய்க்காணு முன்னம் காட்டலும், அவையும் பலவாண்டுகளுக்கு முன் காட்டுவித்தலும் ஆகிய அறிய குணங்கள் நாடிகளிலுண்டு. ஆனால் ஆயுர்வேதத்திலோ திரிதோஷங்கள் அதாவது பிணி ஏற்பட்ட பிறகே அதனாலேற்படும் கோளாறுகளைக்கொண்டு ஆராய்தலே வழி.

எண்வகையாக நோயைக் கண்டு பிடிப்பதும், சிறுநீரில் நெய்களைவிட்டு நோயையும், அதினளவும், அதின் சாத்யா சாதயங்களையும் கண்டு பிடிக்கும் வழி சித்த வைத்தியத்தில் தான் உண்டு. ஆனால் ஆயுர்வேதத்தில் முன்னே அவையில்லை. அட்டாங்க இருதயம் தமிழ் வித்தை, மலையாளத்தார் வழியே வடநூலாரிடம் சென்றது. சென்னையில் ஆயுர்வேத வைத்தியத்தில் நிபுணரும், பிரமுகருமான ஸ்ரீமான் டாக்டர் லட்சுமிபதி அவர்கள் விஜயநகரம் ஆயுர்வேத மகாநாட்டில் பேசிய போது சமஸ்கிருத கலையைவிட வேராகிய தமிழர் வைத்தியம், ஐத்ரேயர் அல்லது சுச்ருதர் உடனுவது அல்லது அவருக்கு முன்னேயே யிருந்தாவது வந்துகொண்டிருக்கிறது. சமஸ்கிருத நூல்களின் நாடி விஞ்ஞானத்திற்கு முந்தினதாகவே அவர்கள் நாடி பரீட்சை காண்கிறது. இப்போது வடநூலாரால் தழுவப்பட்ட "எண்வகை பரீட்சை" தமிழர்களுக்கே தனிமையாக உரியது. யோக சாஸ்திரமும், சூரியன், சந்திரன் என்னும் கலை ஞானமும் அவர்களதே. அதாவது தமிழரதே என்று பாரபட்சமில்லாமல் கூறியதைக் கவனியுங்கள். முக்கியமான மேற்படி

பரீட்சையும்,யோகமும், கலைஞானமும் எண்வகை ப்பரீட்சையும் தமிழரதே.

## ஆயுர்வேத காலம்.

ஆயுர்வேத காலம் சராசரியாக கணக்கிடப்பட்டிருக்கிறது. கலியுக தன்வந்திரி யென்னும் நமது டாக்டர் லட்சுமிபதியவர்கள், விஜயநகரத்தில் நடந்த ஆயுர்வேத மகா நாட்டில் காலத்தைக் குறித்திருக்கிறார்.

பரத்வாஜர் 1000 கி. மு.

தன்வந்திரி- ?

நாகார்ச்சுனர்—3 கி. மு. ஐத்ரேயர் 6 கி. மு. (சரகர்) பதஞ்சலியே சரகராகக் கருதப்படுகிறார். சுச்ருதர் 1-6 கி. மு. பதஞ்சலி—(இரண்டாவது உலோகாதிகளைக் குறித்து பேசியவர்) 2 கி. மு. சுச்ருதர் 2-2 கி. பி. நாகார்ஜுனர் இடையில். வாக்பட்டர் (1) 2-6 கி. பி.

மாதவாகரன்—7, 8 கி. பி. துருதபாலர் 8 கி. பி. வாக்படர் இரண்டாவது. 8, 9, கி. பி. விரிந்தர் (சித்த யோகம் எழுதியவர்.)950 கி. பி. சக்ரபண்டிதர். 1060 கி. பி. தல்லனர் 12 கி. பி. வாக்படர், மூன்றாவது (ரசரத்தின சமுச் சயம் எழுதியவர்) 13 14 கி. பி. தன்வந்திரி நிகண்டு. யாவாமிசிரார் 16 கி. பி. இன்னும் மற்றவர்கள்).

இதுவல்லாமற் வடநூற்களில் கலியுக ஆரம்பத்திலே தான் பிரம்மாவானவர் 4 உபவேதங்

களை உண்டாக்கினர் அவைகளில் ஆயுர்வேதம் ஒன்று என்று கூறுவர்.

ஐத்ரேயர் என்பார் முதல் முதல் எழுதிய ஆயுர்வேத நூல் ஐத்ரேய சம்ஹிதை என்பது. அது இரண்டு காண்டங்களையுடையது முதல் காண்டத்தில் 21 அத்தியாயங்களும், இரண்டாவதில் 8 அத்தியாயங்களும் உண்டு. இதுதான் ஆயுர்வேதத்தில் முதல் முதல் எழுதப்பட்ட நூல்.

## 1-வது அத்தியாயம்.

---

### முகவுரை.

ஹிமயமலை வடச்சாரலில் தனது சீடர்களை சந்திக்கிறார். சீடர்களிலொருவரான ஹாரிதர் கேள்விகள் கேட்க, ஐத்ரேயர் வைத்தியம் என்றர்த்தம் கொள்ளும் ஆயுர்வேதத்தை, மனிதன் வாழ்நாட்கள் குறைவானதால், முழுதும் சொல்ல முடியாதென்று கூறி, தான் செய்த சுருக்கமாகிய 1,500 ஸ்லோகங்களை படித்தால், தெளியலாமென்கிறார்.

தமது நூலைப் பொதுவாக ஆறுபாகத்தில் விளக்கிப் பெயர்களும் கூறுகிறார். ஆயுர்வேதத்தின் எட்டு முக்கியாம்சங்கள் கூறப்படுகின்றன. வியாதிகளை, சாத்யா சாத்யமென்றும், மந்திரத்தால் தீருபவை என்றும் விதிக்கிறார். யாருக்கு வைத்தியம் செய்யலாம், யாருக்கு செய்யக் கூடாது எந்த திட்டத்தில் செய்யலாமென்பதும் குறிக்கப்படுகிறது. வசிக்கும் ஊர், கால நில

மை, வயது, குணம் பல வகை காற்றுகளினு லேற்படுபவை கூறப்படுகிறது. அறுவகை சுவை யைக் குரித்தும், 6 பலவகை நீர்கள், ஆற்று நீர், கடல்நீர், வெந்நீர், தண்ணீர் முதலியவையைக் குரித்தும், 7-8 பாலைக் குரித்தும், 9 கரும்பு வைத்திய சம்பந்தமாக உபயோகப்படுவதையும், 10 வது காடியி னுபயோகமும், 11, 12 குடி நீர்களையும், 13 எண்ணெய் முதலியவைகளையும், 14, 15, 16 தானிய உபயோகத்தையும், 17 மூலிகைகளைக் குறித்தும், 18 பழங்களையும், 19 மதுக்களையும், 20 பட்சிகள், மீன், மிருகங்களை பயன்படுத்தலையும், 21 பத்திய முதலியவைகளை யும் கூறுகின்றன. இரண்டாங்காண்டம் வியாதி களேற்படும் வகை, நரக சுவர்க்கங்கள், கினவு கள், அதிர்ஷ்ட குறிகள் முதலியவைகளையும் மூன்ருவது வியாதிகளைக் கண்டறியும் வகைகளை யும் கூறுகின்றது.

இதை சொல்ல வந்தது ஏனென்ருல், ஆயுர் வேதத்தில் முதல் முதலிலெழுதப்பட்ட நூலில், உப்பு, உலோகங்கள், இரச பாஷாணுதிகள் கூறப் படாமையை எடுத்து காட்டவே யாம். பிறகே நாகார்ஜ்ஜுனன் (இவரையே சித்த நாகார்ஜுன னெனக் கூறுவர்) என்பவரால் ரசபாஷாணுதிகள் உபயோகமும், பதஞ்சலி யென்பவரால் உலோ காதிகள் உபயோகமும், விதிந்தரால் சித்த யோகமும் புகுத்தப் பட்டன. ஆயினும் சரகரா கிய பதஞ்சலியாலும் சிலவைக் கூறப்படாமற் போகவில்லை. அவை வெகு கொஞ்சமே. சித்த வைத்தியத்தில், மூலிகை, உப்பு, தீனீர், உடற் பொருள், விட்கறற்கள் (பாஷாணங்கள்), லோகம்,

சத்து, மணி, சிவயோகம் என்பவை படிப்படியே ஒன்றுக்கொன் றுயர்ந்ததாம்.

"மன்மூலிகை வகை வல்லுப்புத்தீ நீர், மன்று துடற்பொருள் பாடாணம் லோகம், இன்னியற் சத்தி ரச மணியோகம், ஒன்றுக் கொன்றுயர் விலக் காம் நோய்க்கே," என்று திருமூலர் 8,000 கூறும். வீரம் முதலாய விடக்கற்கள், பொன் முதலாய உலோகங்கள், தனியாகவும் தூயதாகவும், கட்டு, பற்பம், சிந்தூரம், கருப்பு, சுண்ணம் என்பதாக மாற்றப்படும் வகையுமுண்டு. சித்த வைத்தியத் தில் எல்லா சரக்குகளையும் கட்டியே வேலை செய் வர். ஆனல் ஆயுர்வேதத்தில் கட்டென்பதே கிடையாது.

சீர்காழியில் வசிக்கும் வைத்தியர் ஸ்ரீ. சி. எஸ். நாராயண ஐயர் இந்திய மருந்து பரிசோ தன கமிட்டி முன்னே சாட்சியம் கூறும்போது, கூறியதாவது.

"பல சித்தர்களாலேற்பட்ட இரசாயன சாஸ் திரங்களே ஆயுர்வேதமாகும். இவைகள் குகை களில் வைக்கப்பட்டிருந்தன. தவிர, சரக்குகளை கட்டும் வகை ஆயுர்வேதத்தில் கிடையாது" என் பதாம். தனி மூலிகைகளினுல் சாலச் சிறந்த வேலை களாதலும் சித்த வைத்தியத்திலுண்டு. கர்ப்ப வகையில், உப்பின் கைப்பை கசிவை நீக்கி முப்பு என்றபோரால் செய்யும் ஓர் வகை மருந்திஞல், நாம் காணு மிவ்வுடல் மாற்ற மடைந்து வெளி யொளியாக மாறிவிடும் வகை சித்த வைத்தியத்தி லுண்டு. ஆயுர்வேதத்திலோ கனவில்கூட இவ்

வகை கிடையாது. ஆயுர்வேத வைத்தியமென் பது தனியாக மூலிகைகளை குறிப்பதேயாம் என் பது ஐத்ரேயர் நூலால் தெளியக் கிடக்கின்றது. *முன்னே கூறியபடி வடநூலோர் நம்மோடு பழகி நம் நூர்க்களை தம் மொழியில் மாற்றிக்கொண்டது மன்றி நம்மரசரை மயக்கி அவருக்கு உரியோரா யிருந்ததினுல் நமது பழைய நூற்களையும் கொளு த்தி மறையும்படி செய்தனர்.* ஆனுல் குருசீட பரம்பரையாக வருவோர்க்கே சித்த சாஸ்திரம் வழிவிடுமோதலால் குருவில்லாமல் கவர்ந்து கொண்ட வித்தை அவர்கட்காவது அல்லது அவைகளை பின்பற்றியோர்க்காவது கைகூட வில்லை. *ஞானவாசிட்டத்தில் 18 சித்தர்களில் ஒருவராகிய புசண்டர் ஆயுர்வேதத்தில் சிறந்தோ ராம், ஏழு இருடியற்குப் பெரியோராகிய வசிட் டரை தம்மைக் காணவந்தபோது "நீ எட்டு தரம் பிறந்து இவ்வாறு வந்து சந்தித்தாய் என்று கூறியிருத்தலிணுலேயே"* வசிட்டராதி யர் மீண்டும் மீண்டும் பிறத்தலுக்குட்பட்டோ ரேன்றலும், சித்தராகிய புசண்டனுர் எப்போதும் நிலவுகிரு ரேன்னலும் ஏற்படுகிறதன்றே. இரச *பாஷாணுதிகள் இப்போது ஆயுர்வேதத்தில் கை யாளப் பட்டாலும், அவைகள் சித்தர்களைப்போல் கைதேர்ந்த முறை களல்ல வென்பதர்க்கு பல சான்றுகளுண்டு.* நமது டாக்டர் லட்சுமிபதிய வர்கள் "நம்மால் இன்னும் ஆராய்ச்சி செய்ய முடியாததான சித்தர்களின் இராசயன நூல், நாகார்ஜுனன் வழியினதா யில்லாமல் தனி உரிமையும் வளர்ச்சியு முடையதே" என்க்கூறி யிருக்கின்றனர்.

# மாந்திரீக நூல்.

மாந்திரீகத்தை யாராயுங்கால், ஓரெழுத்து, ஈரெழுத்து மூன்றெழுத்து, நான்கெழுத்து, ஐந்தெழுத்து மாறல் வேலைகள் ஐங்நால் வேலை, ஐங்குருவி வேலை, சுழிமுனையோகம் முதலியவை வடநூலாரிடத்து காணப்படுவதில்லை, அங்க நியாசம் கரநியாசங்களடங்கிய வட நூலார் மாந்திரீகத்தால் உடனுக்குடன் வேலையேயாவதில்லை. மாந்திரீகமோ சித்த வைத்தியத்தினோர் பகுதியாம். வட நூலிலோ அதர்வண வேதத்தில் மாந்திரீகம் கூறப்படுகிறது அது உடனுக்குடன் உதவி யாகாத வேலையாம். இருக்க உடலை போக்கடிக்காமையாகிய முப்பு பாகம் ஆயுர் வேதத்திலில்லை. ஆனால் பிற்காலம் நம் நாட்டிலிருந்து கற்றுக்கொண்டு போகப்பட்ட, சூதம், கெந்தி, அப்பிரேக பிரயோகங்களைக் கொண்டு இருடியர்கள் இவ்வுடலை வெகு காலமழியாம லிருக்கும்படி செய்வர். எல்லாம் ஒடுங்குங்காலத்தில் இவ்விருடியருடலழிவுபடும். சித்தர்களுடலோ வெளியொளியாகி அறிவுகுன்றாதிருத்தலினால் அனாதியிலொடுங்கினும் தோற்றத்தில் பரமாணுக்கள் வெளிப்படும்போதே வெளிப்பட்டு பழையபடியே நிலவும். இங்கே ஒன்று கவனிக்க வேண்டிய திருக்கின்றது. புசண்டாதியோர்களினுடல் எவ்வாறிருந்த தென்பதை தாயுமானர் " பாரோடு நன்னீராதி ஒன்றோடொன்றாகவே பற்றி லயமாகும்போது பர வெளியில் மருவு வீர் கறபாந்த வெள்ளம் பரந்திடினதற்கு மீதே நீரிலுரைவண்டாய் துவண்டு சிவயோக நிலைநிற்பீர் விகற்பமாகி,

நெடியமுகிலேழும் பரந்து வருஷிக்கிலோ நிலவு மதி மண்டலமதே, ஊரென விளங்குவீர் பிரமாதி முடிவில் விடையூர்தியருளால் உலவுவீர், உலகங்கள் கீழ் மேலதாகப் பெருங்காற்றுலாவினற்று ரணையினுல் மேருவென வசையாமல் நிற்கவல்லீர் உமது மேதக்க சித்தியெளிதோ, வேதாந்த சித்தாந்த சமரச நந்நிலைபெற்ற வித்தகச் சித்தர் கணமே" என்று கூறுதலினுல், நமது வள்ளுவனுர் தமது திருக்குறளில் கூறிய "ஐந்தவித்தானுற்றல கல்வி சும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி' என்பது பஞ்ச பூதங்களை அடக்கி அதாவது தம் வயப்படுத்தியாளும் நிலைமையையே குறிக்கும். உடல் வெளி வொளியாக மாறி, பஞ்ச பூதங்களுடனேயே எக்காலம் உலாவி நிலவி யிருத்தலென் பதேயாம். இதற்கு முன்னே கூறிய புசண்ட வசிட்ட விவாதமே சாட்சியாம். மறைப்பு உருமாற்றம், ஊடுருவும் பார்வை முதலியவை சித்த வைத்தியத்தையே சார்ந்ததாம். ஆயுர் வேதத்திற்கு எண்வகைப் பரீட்சையாகிய அஷ்டாங்க ஹிருதயத்தைக் கொண்டு போனதுபோல் மலையாள தேசத்தினராகிய சித்த நாகார்ஜுனர் இரச பாஷாணுதி பிரயோகங்களையும் உட்புகுத்தினர்.

காலஞ்சென்ற கனம் பண்டிட் டி. கோபாலா சாருலு அவர்கள் கல்கத்தாவில் கூடிய ஆயுர் வேத மகாநாட்டில் பேசியபோது "தேன் இந்தியாவில் மூலிகைகள், இரசவர்க்கங்களைக் கையாடும் அகத்திய வைத்தியம் காணப்படுகிறது. உலோக வகைகள் ரச வகைகளால் செய்யும் மருந்து முறைகள் தமிழ் நாட்டாருடைய தனி முறைகளாகவே காணப்படுகிறது. உலோகங்

களையும், தாது வகைகளையும்கொண்டு செய்யப் படும் பஸ்பம், சிந்தூரம், திராவகம் முதலிய பல வகை முறைகள் வடமொழியிலுள்ள இரச சாஸ் திரங்களுக்கு வேறு பட்டவைகளாகவே யிருக் கின்றன. தமிழ் முறைகளின்படி உலோகங்கள் இரசவர்க்கங்கள் முதலியவற்றை நீற்று பஸ்பம் சிந்தூரங்களாக எளிதில் செய்துவிடலாம். சேய நீரால் பாஷாண முதலியவைகளைக் கட்டி தேன் முதலிய அனுபானங்களில் வாதரோகம், சன்னி வாதம் முதலிய மிகக் கடுமையான நோய்களுக்கு கொடுத்தலினால் குணமடைகின்றது. வடமொழி யிலுள்ள ஆயுர்வேத நூற்களில் கூறப்பட்டபடி அப்பிரேகத்தை நூற்றுக்கணக்கான புடங்களில் எரித்தாலன்றி அதிலுள்ள மினு மினுப்புப் போகிறதில்லை. ஆனால் தமிழ் முறைப்படி பத்து புடத்தில் மினு மினுப்பு மறைந்து பஸ்பமாய் விடுகிறதும் தவிர அப்பஸ்பத்துக்கு வீரியமும் மிகுதியாகும். கட்டு மருந்துகளை மிகக் கொடுமை யான நோய்களுக்கு மிகவும் சிறிய அளவில் இரண்டு வேளைக்குமேல் உபயோகிப்பதில்லை. இவ்வகை மிகச்சிறந்த நூற்றுக்கணக்கான முறை கள் தமிழ் வைத்தியத்தில் உண்டு. ஆயுர்வேத முறைகளைப் பார்க்கிலும் அகத்திய வைத்திய முறை அனேக விதத்தில் வேறு பட்டதாகவே தோன்றுகிறது. அகத்திய வைத்திய சம்பந்தமான நூல்களிலுள்ள பரி பாஷைச் சொற்கள் வட மொழி நூல்களில் காணப்படாமலிருப்பதே இதற்குப் போதுமான பிரமாணமாகும்'' என்று பாரபட்சமற்றவராய், நடு நிலையில் நின்று பேசி யிருக்கிறார்.

சித்த வைத்தியத்தில் நிபுணர்கள் நாடியைப் பார்த்தே, மற்ற பரிட்சைகளின் உதவியில்லாமலே வியாதிகளையும், காரணங்களையும், நிலைமையையும் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆயுர்வேதத்திலோ தொடுதல், பார்த்தல், கேட்டல் முதலியவைகளால் தான் தெளியக்கூடும். பழமையாகக் கருதப்படும் ருக்வேத ஸ்லோகங்களில் நீரைக் குறித்தும், மூலிகைகளைக் குரித்தும் பேசப்படுகின்றதே தவிர, உப்பு, ரசபாஷாணுதிகள் பேசப்பட வில்லை. சித்த வைத்தியத்தை கூறும்போது,

## மருத்துவர் யார் ?

"சோதிடம் பஞ்சபட்சி துலங்கிய சரநூல் மார்க்கம், கோதுறு உடம்பின் கூறும் கொடிய தாம் நோயின் கூறும், தீதிலாப் பொருளின் கூறும் செய்வகை மருந்தின் கூறும், ஈதெலாம் கற்றுணர்ந்தோர் இவர்களே மருத்துவராவார்" எனக் கூறப்பட்டதால், "வைத்தியலச் செயல் வைத்தியமாமே" என்று சித்தர் திருமூலர் எண்ணுயிரத்தில் கூறியபடி, மணியாகிய கோள் ஆராய்ச்சி நூலும், சாகா நிலையை எய்துவிக்கும்படியான கலையாகிய சரநூலும் இணைக்கப் பட்டிருக்கிறது கண் கூடே. ஆனால் ஆயுள் வேதத்தை உபவேதமாக கலியுக முதலிலே தான் (அதாவது சுமார் 5,000 வருடங்கட்கு முன்னரே) செய்ததினுலே தனியாக ஓஷதிகளை (மூலிகைகளை வகுத்து ஆயுர்வேத மென்றனர். அதற்குறுதியாக, ஆயுர்வேதத்தை நன்காராய்ந்தவர்களால், பல காரணங்களைக்கொண்டு, ஆயுர்வேதம் பூவுலகிற்கு வந்த காலம் சுமார் கிறீஸ்து பிறப்பதற்கு ஆயிரம்

ஆண்டு முன்பே யெனக்குறித்து உளர். வைத்திய வகைகளில் ஆராய்ச்சியினாலும், அனுபவத்தினாலும் பல்லாயிரவாண்டுகளாக வழிவழியே வந்திருக்கின்றது நமது சித்த வைத்தியம். நாடிபரீட்சையும் அஷ்டாங்க பரீட்சையும், உப்பு முதல் லோகமீருக, இரசபாஷாணதிப் பிரயோகங்களும் தமிழர்களினதே யென்றும், உபயோகங்கள் முதலியவை ஆயுர்வேதத்தைவிட வேருனதே யென்றும் தென்னிந்தியாவில் ஆயுர்வேதத்தில் சிறந்த மேதாவிகளாகக் கருதப்படும் காலஞ்சென்ற பண்டிட் டி. கோபாலாசார்லு, சென்னையில் ஆயுர்வேதமணியாக விருக்கும் டாக்டர் லட்சுமிபதி இவர்கள் கூறுவதிலிருந்தே விளங்கிவிட்டதே யல்லவோ. ஆதலின், சித்த வைத்தியத்திலிருந்தே ஆயுர்வேதம் பிறந்த தென்பதற்கு ஏதேனும் இழுக்குண்டோ? இருக்க, ஆயுள்வேதம் எனும் சொல்லே ஆராயின் அது தனித் தமிழ் சொல்லாம். உடலை நீடூழி நிறுத்துவதென்பது. அப்படி உடலை அழியா நிலையாகிய சமாதி நிலையை யடையச் செய்வது ஆயுர்வேதத்தில் மருந்துக்குகூட இல்லை. வட நூல் ஞானசாத்திரமாகிய வேதாந்தமோ, இவ்வுடலழிய வேண்டியதே எனக் கூறுவதால், நாம் கண்டது இவ்வுடலே யாதலின் இது அழிபடாமல், தொன்மை நிலையாகிய வெளி வொளியாக மாற்றிவிடல் என்னும் சித்த வைத்தியத்தின் சிறப்பு தோன்றுகிறதல்லவோ? ஆதியாகிய வெளிவொளி மாற்றமடையாமல், ஆக்கல், காத்தல், அழித்தல், தொழிலைச் செய்து ரூபாரூபமாக இருப்பதால் அந்த ஆதியாகிய வெளி வொளியாக மாறி, சிருட்டி திதி சம்மார வல்ல

மைகளை பெற்று ரூபா ரூபமாகிய நிலையை யடைந்து சதா இருத்தலையே ஆதிக்கு சமமாகிய நிலை அதாவது சமாதி நிலையென சித்தர்கள் கூறினர். ஆனால் சில சித்தர் நூற்களில் வடமொழியிலிருந்து கூறுகிறோம் என்கிறதேயென்றால், அப்படி கூறுபவர்கள் யாரென்றால் பிற்காலத்திலேற்பட்ட வடநாட்டு சித்தர்களாம். அவர்கள் நந்தி மரபைச் சார்ந்த யூகி முனி, அகத்தியர், தன்வந்திரி, தேரையர் முதலியோராவர். கைலாய வர்க்கத்தினர். பாலவருக்கத்தைச் சார்ந்த வாலையருள் பெற்ற வேலனருஞ் சீடராவாறின் வர்க்கம் வேறு. இவ்வர்க்கத்தைச்சார்ந்த அகத்தியனார் முதலியோர்கள் வேறு. அவர்களது தனித் தமிழ் நூலேயாம். வடநாடில்லாமல் கடலாயிருந்த காலத்திலேயே தென் பக்கம் நாடு பல காலங்களுக்கு முன்னேயே இருந்த தென்றும், அந்நாட்டில் இருந்த பண்டைய பாஷை தனித் தமிழே யென்றும், அத்தமிழில் தேர்ச்சி யடைந்து பல்லாயிர வாண்டனுபவங்களைத் திரட்டி தந்த நூற்களில் சித்தர்கள் சிறப்பாகக் கருதி சீடர்கள் மூலமாய் தந்தது சகாக் கல்வியென்னும் சித்தவைத்திய மென்பதும், அவ்வாறாய தென்னாட்டில் பல கடற் கோள்களால் நிலங்கள் பிரிக்கப்பட, ஆபிரிக்காவிலிருந்து வடக்கே போந்து உத்தர துருவதில் வசித்து பல்லாண்டுகளுக்குப் பின் நம் தமிழ்நாட்டுள் நுழைந்து நம்மோடு பழகி, எழுதி வழங்கிய சித்தவைத்தியத்தின் வொருபகுதியே ஆயுர்வேத வைத்தியமென்பதாகுமெனப் பெறப்பட்டதாம். பெயர்பெற்ற நவீன கதாசிரியர் வடுவூர்-துரைசாமி ஐயங்கார் தாம் எழுதிய ஓர்

ஆராய்ச்சி நூலில், தமிழிலிருந்தே சமஸ்கிருதம் முதலிய எல்லா உலக பாஷைகளும் வெளிப் போந்தனவென உறுத்திபல காரணங்காட்டி கூறு நிற்பர். அபாரமாகிய இரகசியங்கள் இன்னும் சில ரிடத்தே. ஒளித்து உலாவிக்கொண்டிருக்கின்றன. ஆதலின் சித்த வைத்தியமே முன்னேயிருந்ததும், பல பெயர்களைக் கோளினும் இப்போதிருப்ப தும், இனி யெக்காலமு மிருக்கப்போவதுமாம். சித்த வைத்தியமும் ஆயுர்வேதமும் பேரில் மாற் றம் வேறுனதேயன்றி எல்லாம் ஒன்றே.

3854

சித்தரடிகள் வாழ்க.

Solden & Co., Madras, S E.